ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1857/3 - 2014 අප්‍රේල් මස 07 වැනි සඳුදා - 2014.04.07

*1857/3 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல்

*சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)*

***2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சுங்கச் (திருத்த) சட்டத்தின் "உ" அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழான கட்டளை***

*2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்தம்) சட்டத்தின் "உ" அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழ் எனக்குரித் தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் பொருள் இயைபு முறைக் குறியீட்டு தலைப்பு இலக்கங்கள் 87.01, 87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்படும் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் பெறுமதிக் (விலை) கணிப்பீடானது 2014.04.08 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்படுவதனைப் போன்று பிரயோகிக்கப்படல் வேண்டும் எனப் பிரகடனப்படுத்துகின்றேன்.*

பகுதி I

***புதிய மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதி (விலை) கணிப்பீடு செய்தல்***

87.01, 87.02, 87.03, 87.04, 87.5 மற்றும் 87.11 இயைபு முறைக்குறியீட்டு தலைப்புகளின் கீழ்வரும் புதிய மோட்டார் வாகனத்தின் சுங்க நோக்கங்களுக்கான பெறுமதியானது அத்தகைய வாகனத்தின் உற்பத்தியாளரினால் வழங்கப்பட்ட விலையினை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பெறுமதியின் பேரில் சகல வரிகளும் அறவிடப்படுதல் வேண்டும்.

பகுதி II

***பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதி (விலை) கணிப்பீடு செய்தல்***

87.01, 87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 இயைபு முறைக்குறியீட்டு தலைப்புகளின் கீழ்வரும் பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனத்தின் சுங்கப் பெறுமதி பின்வருவனவற்றின் கூட்டுத் தொகையாக இருத்தல் வேண்டும்.

(அ) கீழே (i) இலும் (ii) இலும் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியில் ஆகக்கூடிய பெறுமதி,

(i) (iii) இல் குறிப்பிடப்பட்டவாறான பெறுமானத்தேய்வின் பெறுமதி.

(ii) விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கப்பற்தளம் மட்டும் உள்ளதான பெறுமதி.

(iii) அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்தேய்வு நியதிகளுக்கமைவாக அல்லது அத்தகைய வாகனத்தின் உற்பத்தியாளரினால் வழங்கப்பட்ட விலையினை அடிப்படையாகக் கொண்டு சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய புதிய மோட்டார் வாகனத்தின் FOB பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கைத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு.

(இ) ஏற்றல், இறக்கல் மற்றும் கையாளுதலோடு இணைந்த இலங்கைத் துறைமுகத்திற்கு கொண்டு செல்வதற்கான செலவு; மற்றும்

(ஈ) இலங்கைத் துறைமுகத்திற்கான காப்புறுதிச் செலவினம்.

**அட்டவணை I**

பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதியைக் கணிப்பதற்கான பெறுமானத்தேய்வு அட்டவணை

பாவனைக் காலங்களின் கணக்கீட்டுக்காக வாகனத்தின் முதற் பதிவுத் திகதிக்கும் கப்பலேற்றப்பட்ட திகதிக்கும் (வார்நாமப் பத்திர திகதிக்கும்) இடைப்பட்ட காலப்பகுதி கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ஆண்டும் மாதமும் மட்டும் கொடுக்கப்பட்டிருப்பின் அடுத்த மாதத்தின் முதற் திகதியானது முதற் பதிவுத் திகதியாகக் கணிக்கப்படும்.

ஆண்டு மாத்திரம் கொடுக்கப்பட்டிருப்பின் அடுத்த மாதத்தின் முதற் திகதியானது பதிவுத் திகதியாகக் கணிக்கப்படும்.

| பாவனைக் காலம் | தேய்மானம் செய்யப்பட்ட எப்.ஓ.பி. (FOB) பெறுமதி |
|---|---|
| 1 வருடத்துக்கு மேற்பட்டவை 2 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 90% |
| 2 வருடத்துக்கு மேற்பட்டவை 3 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 80% |
| 3 வருடத்துக்கு மேற்பட்டவை 4 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 75% |
| 4 வருடத்துக்கு மேற்பட்டவை 5 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 65% |
| 5 வருடத்துக்கு மேற்பட்டவை 6 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 60% |
| 6 வருடத்துக்கு மேற்பட்டவை 7 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 55% |
| 7 வருடத்துக்கு மேற்பட்டவை 8 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 50% |
| 8 வருடத்துக்கு மேற்பட்டவை 9 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 45% |
| 9 வருடத்துக்கு மேற்பட்டவை 10 வருடத்துக்கு சமனானவை அல்லது குறைந்தவை | 40% |
| 10 வருடத்துக்கு மேற்பட்டவை | 35% |

2013, நவெம்பர் 21 ஆந் திகதிய 1837/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பெறுமானத் தேய்வு அட்டவணையானது இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி
(நிதி, திட்டமிடல் அமைச்சர்).

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01.
2014, ஏப்பிறல் 07.

04-761

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.